# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.வி.மு.ச பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**

**INTEGRATED INVESTIGATION FORM-I**

C 8082814

1. District / மாவட்டம்: பெரம்பலூர் PS / காவல்நிலையம்: ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு Year / ஆண்டு: 2025 FIR No. / மு.த.அ. எண்: 02 Date / நாள்: 06.03.2025

2. (i) Act சட்டம்: Sections பிரிவுகள்:

   (ii) Act சட்டம்: ஊழல் தடுப்பு சட்டம்- 1988 Sections பிரிவுகள்: 7

   (iii) Act சட்டம்: (2018-ல் திருத்தப்பட்டது) Sections பிரிவுகள்:

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்

   Date from : நாள் முதல் 05/03/2025 Date to : நாள் வரை

   Time Period : நேர அளவு

   Time from : நேரம் முதல் 11·30 hrs Time to : நேரம் வரை

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 05/03/2025 Time : நேரம் 17·30 Hrs

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக கணினியால் தட்டச்சு செய்யப்பட்டது.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 2 கி.மீ மேற்கு

   Beat Number : முறைக் காவல் எண்

   (b) Address : முகவரி E.O அலுவலகம், மதன கோபாலசுவாமி கோவில், பெரம்பலூர்

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —

   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் N. சிவா @ சிவநேசன்

   (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் நல்லுசாமி

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு வயது- 28

   (d) Nationality : நாட்டினம் இந்தியன்

   (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —

   Date of Issue : வழங்கப்பட்ட நாள் —

   Place of Issue : வழங்கப்பட்ட இடம் —

   (f) Occupation : தொழில் டிரைவர்

   (g) Address : முகவரி சிவன் கோவில் தெரு, செங்குணம் (PO), பெரம்பலூர் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   திரு. கோவிந்தராஜன், செயல் அலுவலர் (E.O), மதனகோபாலசுவாமி கோவில், பெரம்பலூர்

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   தாமதமில்லை

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................... பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

N. Sivan 6.3.25

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer In-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 06/03/2025
06.55 Hrs

Name: பெயர் கு. சி. ஜெயமகேந்திரா
Rank: பதவி நிலை துணை கண்காணிப்பாளர்
ஊழல் தடுப்பு மற்றும்
கண்காணிப்பு பிரிவு,
பெரம்பலூர் 06/03/2025

**கனம் தலைமை குற்றவியல் நீதிதுறை நடுவர்/ சிறப்பு நீதிபதி பெரம்பலூர் அவர்கள் முன்பாக பணிந்து சமர்பிக்கபடுகிறது:**

**பெரம்பலூர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்: 02/2025-ன் முதல் தகவல் அறிக்கையின் காலம் 12-ன் தொடர்ச்சி**

பெரம்பலூர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளராகிய நான் 05.03.2025 ஆம் தேதி பணியில் இருந்தபோது மாலை 05.30 மணியளவில் பெரம்பலூர் மாவட்டம் செங்குனம் கிராமம் சிவன் கோவில் தெருவை சேர்ந்த நல்லுசாமி மகன் N.சிவா @ சிவநேசன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த கணினி மூலம் தட்டச்சு செய்யபட்ட புகார் மனுவை பெற்று அது குறித்து சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, இயக்குநரகத்திற்கு தெரிவித்து, அந்த புகார் மனு குறித்து முதல் கட்ட விசாரணை செய்து, புகார் மனுவில் கூறப்பட்டுள்ள பெரம்பலூர் மதனகோபாலசுவாமி திருகோவில் செயல் அலுவலர் திரு.கோவிந்தராஜன் என்பவரின் முன் நடத்தைகள் பற்றி விசாரணை மேற்கொள்ளபட்டு, இன்று 06.03.2025-ம் தேதி காலை 06.00 மணிக்கு பெரம்பலூர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்: 02/2025, சட்டபிரிவு 7 ஊழல் தடுப்பு சட்டம் 1988 (as amended in 2018)-ன் படி வழக்கு பதிவு செய்தேன். புகார் மனுவில் குறிப்பிட்டுள்ள விவரம் பின்வருமாறு:- அனுப்புநர், N.சிவா @ சிவநேசன் த/பெ நல்லுசாமி, சிவன் கோவில் தெரு, செங்குனம் (Po), பெரம்பலூர் மாவட்டம். பெறுநர். காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்பு துறை, பெரம்பலூர் மாவட்டம். அம்மா அவர்களுக்கு, நான் மேற்சொன்ன விலாசத்தில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். எனக்கு 28 வயது ஆகிறது. நான் பன்னிரெண்டாம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் சோளதட்டை அடிக்கும் த்ரஷர் மெஷின் ஓட்டும் வேலை பார்த்து வருகிறேன். எங்கள் செங்குனம் கிராமத்தில் அமைந்திருக்கும் மிகவும் பழமை வாய்ந்த ஆலயமான அருள்மிகு திருபரமேஸ்வரர் ஆலயம் பழுதடைந்து இருக்கிறது. எனவே அத்திருக்கோயிலில் திருபணியினை எங்கள் ஊர் மக்களிடமிருந்தே நன்கொடை பெற்று செய்யலாம் என ஊர் பொது மக்கள் அனைவரும் முடிவு எடுத்து மேற்படி திருபணி செய்வதற்காக அனுமதி கேட்டு மதனகோபாலசுவாமி திருக்கோயிலின் செயல் அலுவலரிடம் கடந்த 25.07.2024-ம் தேதியன்று கிராம மக்கள் சார்பில் மனு அளித்திருந்தோம். அந்த மனுவில் நானும் கையொப்பமிட்டுருந்தேன். மனு கொடுத்து

சுமார் 6 மாதங்களாகியும் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்காத காரணத்தினால் கடந்த 04.03.2025-ம் தேதி மதியம் சுமார் 1.00 மணியளவில் நான் எங்களுடைய கோவிலின் செயல் அலுவலரான திரு.கோவிந்தராஜன் என்பவரை பெரம்பலூர் மதனகோபாலசுவாமி கோவிலில் இருக்கும் அவரது அலுவலகத்தில் சந்தித்து எங்கள் ஊரின் கோவில் திருபணி செய்வது சம்மந்தமாக நான் கேட்டேன். அதற்கு அவர் நான் இன்று பிஸியாக இருக்கிறேன். உங்களுடைய போன் நம்பரை கொடுத்துவிட்டு செல்லுங்கள் நான் ஃப்ரீயாகிவிட்டு கால் செய்கிறேன் என்று சொன்னார். எனவே நானும் அவர் கூறியாவறு எனது போன் நம்பரை அவரிடம் கொடுவித்துவிட்டு எனது வீட்டிற்கு சென்றுவிட்டேன். இந்நிலையில் 05.03.2025 அன்று காலை சுமார் 10.30 மணியளவில் நான் பயன்படுத்தும் அலைபேசி எண்ணிற்கு 9443559307 என்ற எண்ணிலிருந்து ஒரு அழைப்பு வந்தது. நான் அழைப்பினை அட்டன்ட் செய்து பேசினேன். அப்போது போனில் ஒருவர் நான் தான் EO பேசிகிறேன் என்று கூறி உங்க கோவிலில் திருபணி சம்மந்தமாக நான் உங்கிட்ட பேசனும், நீங்க உடனே கிளம்பி எனது அலுவலகத்திற்கு வாங்க என்று சொன்னார். அதற்கு நான் சரிங்க சார் என்று சொல்லிவிட்டு 05.03.2025 அன்று காலை சுமார் 11.30 மணியளவில் மதனகோபாலசுவாமி கோவிலுக்கு சென்று EO திரு.கோவிந்தராஜன் அவர்களை சந்தித்தேன். அப்போது அவர் திருபணிக்கான அனுமதியினை பெறுவதற்கு நிறைய செலவாகும் என்று கூறினார். அதற்கு நான் சார் திருபணிகுண்டான அனைத்து செலவுகளையும் எங்கள் கிராம மக்களிடம் நன்கொடையாக பெற்று நாங்களே செய்து கொள்கிறோம், தாங்கள் எனக்கு அனுமதி மட்டும் பெற்று கொடுத்தால் போதும் என்று சொன்னேன். அதற்கு அவர் என்னப்பா தம்பி விவரம் புரியாம பேசுற நான் திருபணி செய்வதற்கான செயல்முறையினை தயார் செய்ய நிறைய செலவாகும் என்று சொன்னேன், அதற்கு என்னிடம் லஞ்சமாக ரூபாய் 5,000/- கொடுத்தால நான் உங்க ஊரில் உள்ள திருபரமேஸ்வரர் ஆலயத்தில் திருபணி செய்வதற்கான செயல்முறைகளை பெற்று தருகிறேன் என்று கூறினார். அதற்கு நான் சார் அவ்வளவு பணம் என்னிடம் இல்லையென்று கூறியதற்கு EO சார் சரி முதலில் ரூபாய் 3,000/- கொடு, மீதமுள்ள 2,000 ரூபாயினை திருபணிக்கான அனுமதி ஆணையினை பெற்ற பிறகு கொடு என்று கூறினார். நான் சூழ்நிலையினை சமாளிக்க சரிங்க சார் என்று கூறினேன். EO சார் அதற்கு பணத்தை ரெடி பண்ணிட்டு சொல்லு பார்த்துகலாம் என்று சொல்லி என்னை அனுப்பி வைத்துவிட்டார். எனக்கு அவர் கேட்கும் லஞ்ச பணத்தினை கொடுக்க

விருப்பமில்லாததால் அவர் என்னிடம் கேட்ட லஞ்ச பணமான ரூபாய் 3,000/- பணத்துடன் பெரம்பலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு அலுவலகத்தில் தங்களிடம் நேரில் ஆஜராகி மதனகோபாலசுவாமி திருக்கோயிலின் செயல் அலுவலரான திரு.கோவிந்தராஜன் என்பவர் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு SD(****) 05.03.2025. SUBMITTED Sir, Received this Computerized complaint from the complainant on 05.03.2025 at 17.30 hrs, verified and ascertained its genuineness through sources, and registered a case in Perambalur Vigilance and Anti-Corruption Detachment Crime No.02/2025, u/s 7 of the Prevention of Corruption Act 1988 (as amended in 2018) on 06.03.2025 at 06.00 hrs. (sd) K.S. Hemachithra, Deputy Superintendent of Police, Vigilance and Anti-Corruption, Perambalur. I am submitting the Original F.I.R. along with the complaint to the Hon'ble Chief Judicial Magistrate/Special Judge, Perambalur and the copies of the F.I.R to all other concerned Officials. [signature] 6/3/25

DSP, V&AC,
Perambalur.